கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் டிசம்பர் மாதம் 4ம் தேதி வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.19/2025
இன்
அசல் வழக்கு எண்.299/2014
----

முருகேசன் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1) பொது மேலாளர்(நிதி),
GHCL Textiles Limited,
திண்டுக்கல் ரோடு, பரவை, மதுரை.
2) ரவிச்சந்திரன்
3) வெங்கடேஷ்
4) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம்,
திருப்பரங்குன்றம், மதுரை.
5) தமிழக அரசிற்காக அதன் மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் வளாகம், மதுரை.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 24.11.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர்

திரு.A.தமிழ்செல்வம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ஸ்ரீதர் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.தங்கசாமி அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்/வாதியால் ஆவணங்களை சமூகம் நீதிமன்றத்திற்கு வரவழைத்து அதனை வழக்கில் தாக்கல் செய்ய அசல் வழக்கினை Re-oepn செய்ய வேண்டி பிரிவு 151 CPCன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், வாதி தரப்பில் ஆவணங்கள் அசல் வழக்கு கோப்பில் சேர்க்க அசல் வழக்கை re-open செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர் இவ்வாறாக மனுக்களை தாக்கல் செய்து வழக்கினை முடிக்கவிடாமல் காலம் கடத்தும் விதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

**3) தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பெற வேண்டி உள்ளது என்றும், எனவே மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்திற்கு வரவழைக்க கோரி இந்நிர் மனுதாரர்/வாதி தரப்பில் மனு தாக்கல் செய்துள்ளார். எனவே மேற்படி ஆவணங்களை சமூகம் நீதிமன்றம் வரவழைத்து, அதனை வழக்கில் தாக்கல் செய்ய வேண்டி Re-oepn மனு தாக்கல் செய்துள்ளதாக மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

3.2) அசல் வழக்கானது கடந்த 2014ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 11 ஆண்டு காலமாக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், கடந்த 18.09.2019ல் வாதி தரப்பு வழக்கறிஞரால் சாட்சியங்களானது முடித்து வைக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியங்களானது 30.01.2025ல் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் முடித்து வைக்கப்பட்டுள்ளது. சுமார் 1 ஆண்டு காலமாக அசல் வழக்கானது இருதரப்பு வாதுரைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கானது re–open செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் மனுவில் கூறியுள்ளவாறு, ஆவணங்கள் வரவழைக்க வேண்டி மனுதாரர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுவில் கூறியுள்ளது குறித்து பரிசீலனை செய்கையில், மேற்படி மனுதாரர்/வாதி தரப்பில் ஆவணங்கள் வரவழைக்க வேண்டி மனு எதுவும் தாக்கல் செய்துள்ளதாகவோ, மனு எதுவும் நிலுவையில் உள்ளதாகவோ காணப்படவில்லை. இந்நிலையில், மனுதாரர் அசல் வழக்கை re–open செய்ய குறிப்பிட்டுள்ள காரணமானது சட்டப்படியானதாகவோ, நியாயப்படியானதாகவோ காணப்படவில்லை. மேலும், மனுதாரர் அசல் வழக்கை re–open செய்ய சட்டப்படியான காரணங்களை கூறவில்லை என்பதை கருத்தில் கொண்டும், எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில், இம்மனு அசல் வழக்கை காலம்

கடத்தும்விதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளதை கருத்தில் கொண்டும், இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நிதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.12.04 15:06:04 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**இணைப்பு:**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.12.04 15:06:13 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.19/2025
இன்
அசல் வழக்கு எண்.299/2014
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 04.12.2025